# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 14.05.2026**

**முன்னிலை**

## திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)
## மாநில தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். SA 2882/F/2024**

திரு.எஸ்.ஜோதி வெங்கடேசன் .. மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுதகவல் அலுவலர் /
கண்காணிப்பாளர்,
ஒசூர் புதுநகர வளர்ச்சி குழுமம், .. பொது அதிகார அமைப்பு
மின்நகர் TNEB அலுவலகம் அருகில்,
இராயக்கோட்டை ரோடு,
ஓசூர்-635109.

**ஆணை**

இவ்வாணையத்தில் இன்று 13.05.2026 நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு.எஸ்.ஜோதி வெங்கடேசன் அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள் 2012, விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு.ஜோ.யுவராஜ், வரைவாளர் நிலை III, மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்கள் ஆஜரானார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ், தாக்கல் செய்துள்ள மனுவில் சென்னை உயர்நீதி மன்றத்தில் தியாகராஜ செட்டி என்பவர் தொடர்ந்த வழக்குகளில் முறையே ஓசூர் புதுநகர வளர்ச்சி குழுமம் எதிராக

கேட்கப்பட்டுள்ளது மேற்படி வழக்கு எண்.W.P.No.6662 of 2009 ஆகியவை நீதிமன்ற விசாரணை முடிந்து தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது மேற்படி வழக்குகளின் தீர்ப்பு நகல் மற்றும் மேற்படி வழக்குகளின் ஓசூர் புதுநகர வளர்ச்சி குழுமம் சார்ந்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட எதிர் மனுவின் அபிடவிட் ஆகியவை விவரம் ஆவண கோப்புகளின் அடிப்படையில் ஆவணங்களின் நகல்கள் முழுமையாக முழுவிவர தகவல் என்பன போன்ற 3 இனங்களில் தகவல்களைக் கோரியுள்ளார்.

3. அம்மனுவைப்பெற்ற பொதுத்தகவல் அலுவலர் தகவல் வழங்கவில்லை. மனுதாரர் தனக்கு தகவல் வழங்கவில்லை என தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 19(1)ன் கீழ் 10.10.2024 நாளிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டு அலுவலருக்கு தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் தகவல் வழங்கவில்லை. இந்நிலையில் மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 19(3)ன் கீழ் 13.12.2024 நாளிட்ட இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை ஆணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (13.05.2026) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

4. இன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜரான பொதுதகவல் அலுவலர் மனுதாரர் 6(1) மனுவில் கோரிய இனங்கள் குறித்து 09.10.2024 மற்றும் 23.10.2024 தேதியிட்ட கடிதங்கள் மூலம் தகவல்கள் வழங்கப்பட்டிருப்பதாகவும் அதனைப் பெற்று மனுதாரர் 22.04.2026 நாளிட்ட மனநிறைவு கடிதம் வழங்கியுள்ளதாகவும் கூறி அதற்கான ஆவணங்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். இன்றைய விசாரணைக்கு மனுதாரர் ஆஜராகாத நிலையில் 22.04.2026 நாளிட்ட மனநிறைவு கடிதத்தினை ஆணையத்திற்கு தபால் மூலம் அனுப்பியுள்ளார்.

5. இன்றைய விசாரணையில் ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களை பரிசீலனை செய்கையில் பொதுத்தகவல் அலுவலரால் 09.10.2024 மற்றும் 23.10.2024 நாளிட்ட கடிதம் மூலம் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதையும் மற்றும் மனுதாரரின் மனநிறைவு கடிதத்தையும் ஏற்று இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இவ்வாணையம் முற்றாக்கம் செய்து உத்தரவிடுகிறது.

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 2882/F/2024</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுதகவல் அலுவலர் /
கண்காணிப்பாளர்,
ஓசூர் புதுநகர வளர்ச்சி குழுமம்,
மின்நகர் TNEB அலுவலகம் அருகில்,
இராயக்கோட்டை ரோடு,
ஓசூர்-635109.

**<u>மேல்முறையீட்டாளர்:-</u>**

திரு.எஸ்.ஜோதி வெங்கடேசன்,
கதவு எண்.68-எ1,
ஜெய்சங்கர் காலனி,
ஓசூர்,
கிருஷ்ணகிரி-635109.

Copy to file: KR/PA

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005